# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 88/மா/2023**

**நாள்: 03.05.2023**

திரு. R. மயில்சாமி,
புதுவிளாங்குடி,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் 2 (வடக்கு),
மதுரை மாநகராட்சி,
மதுரை. – எதிர்மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 07.01.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.02.2023–ல் பெறப்பட்டு 88/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண் 5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 07.01.2023 நாளிட்ட தனது மனுவில் :

"மதுரை மாநகராட்சி பழைய மண்டலம் -1, வார்டு 23, புதிய மண்டலம் 2 (வடக்கு) வார்டு எண்.1, புது விளாக்குடி ஏரியாவில் 2018 வருட காலக் கட்டத்தில் மாநகராட்சி உதவி செயற் பொறியாளர் (திட்டம்) திரு. சுப்பிரமணியன் அவர்களும், அவருடன் பணிபுரிந்த இளநிலை பொறியாளர் (திட்டம்) ஆகியோர்கள் புதுவிளாங்குடி நேரு மெயின் ரோடு கதவு இலக்கம் 10, 11-62A – வீட்டு மனை பிளாட் எண்.3 மற்றும் 10, இரண்டு பிளாட்டுகளில் புகழ் மஹால் என்ற கட்டிடம் கட்டுவதற்கு கட்டிட அனுமதி எண்.ம1/229/18 நாள்:3/4/2018 தேதியில் தரைதளத்திற்கு மட்டும் 92-23 சதுர மீட்டருக்கு மட்டும் அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் வீட்டு மனை பிரிவுக்கு அனுமதி வாங்கி கொண்டு, தரை தளம் மற்றும் இரண்டு மாடிகளை கட்டிக் கொண்டு புகழ் மஹால் (திருமண மண்டபம்) கடந்த இரண்டாண்டுகளாக செயல்பட்டு வருகிறது. மேலும் மேற்படி புகழ் மஹால் நிறுவனத்தினர் நகர் ஊரமைப்பு துறையின் மூலம் எந்தவித அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டப்பட்டு வந்த நிலையில் மேற்படி நிறுவனத்தினரிடம் கையூட்டல் பெற்றுக்

கொண்டு கட்டிடம் கட்டுவதற்கு மறைமுகமாக திரு. சுப்பிரமணியன் அவர்களும் இளநிலை உதவியாளர் அவர்களும் கண்டும் காணாமல் இருந்துள்ளார் என்பது தெளிவாகிறது.

புகழ் மஹால் கட்டிட அனுமதிக்கு மீறி கட்டப்பட்டதை கண்காணிக்கத் தவறிய திரு. சுப்பிரமணியன், உதவி செயற்பொறியாளர் (திட்டம்) மற்றும் இளநிலை பொறியாளர் (திட்டம்) ஆகிய இரண்டு நபர்கள் மீது துறை ரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிடவும், அவர்கள் வாங்கும் சம்பளத்தை விட கூடுதலாக சொத்து சேர்த்துள்ளதை துறைரீதியான விசாரணைக்கு உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை மிக பணிவுடனும், தாழ்மையுடனும் வேண்டிக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 20.04.2023 அன்று நாகர்கோவில் சர்க்யூட் ஹவுஸில் நடைபெறும் விசாரணையில் ஆஜராகுமாறு 11.04.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**மனுதாரர் 20.04.2023 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி பின்வருமாறு தன்னுடைய வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"மதுரை மாநகராட்சி, வார்டு எண்.1, மண்டலம்–2 (வடக்கு) விளாங்குடி பிட்–1 நேருஜி மெயின் ரோட்டில் உள்ள கதவு இலக்கம் 10,11,–62A வீட்டுமனை பிளாட் எண்.3 மற்றும் 10 இரண்டு பிளாட்டுகளில் புகழ் மஹால் என்ற கட்டிடம் கட்டுவதற்கு கட்டிட அனுமதி 03.04.2018 தேதியில் தரை தளத்திற்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் அங்கு தரை தளத்துடன் இரண்டு மாடிகள் கட்டப்பட்டுள்ளன. அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள மேற்கண்ட கட்டடத்தின் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும், மேற்கண்ட கட்டடத்தின் மீது புகார் அளித்து சுமார் ஒன்னரை ஆண்டுகாலமாக எவ்வித நடவடிக்கையும் எடுக்காத சம்மந்தப்பட்ட உதவிப் பொறியாளர் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**மதுரை மாநகராட்சி, உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் 20.04.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.**

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள மதுரை விளாங்குடி மெயின் ரோட்டில் உள்ள புகழ் மகால் நேரில் கள ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட மகால் கட்டட அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டடம் கட்டப்பட்டுள்ளதால், மேற்கண்ட கட்டடத்திற்கு 13.3.2023 அன்று Lock and Seal Notice வழங்கப்பட்டுள்ளது. அதன் தொடர் நடவடிக்கையும் மாநகராட்சியால் எடுக்கப்பட்டு வருகிறது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்" எனத் தெரிவித்துள்ளார்.

**முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மதுரை மாநகராட்சி உதவி செயற்பொறியாளரின் மற்றும் உதவிப்பொறியாளர் ஆகியோர் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன.**

மனுதாரர் மதுரை மாநகராட்சி மண்டலம் - 2 (வடக்கு) புதுவிளாங்குடி நேருஜி மெயின் ரோட்டில் கதவு இலக்கு எண்.10. 11-62Aற்கு, வீட்டு மனைக்கான அனுமதியில் தரைதளம் மட்டும் கட்டுவதற்கு அனுமதி பெற்று விட்டு, புகழ் மஹால் என்ற இரண்டு மாடி கட்டடம் கட்டப்பட்டு

திருமண மண்டபமாக கடந்த இரண்டு வருடங்களாக செயல்பட்டு வருவதாகவும், அதற்கு மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)ன் அலுவலர்கள் உடந்தையாக இருப்பதாகவும், எனவே விதி மீறல் கட்டடத்தின் மீது உரிய நடவடிக்கையும், உடந்தையாக இருந்த மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)ன் அலுவலர்கள் மீது நடவடிக்கையும் எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள மதுரை விளாங்குடி மெயின் ரோட்டில் உள்ள புகழ் மகால் கள ஆய்வு செய்யப்பட்டு, அனுமதிக்குமாறாக கூடுதலாக கட்டடம் கட்டப்பட்டுள்ளதால் அக்கட்டடத்திற்கு 13.3.2023 அன்று Lock and Seal Notice வழங்கப்பட்டுள்ளது எனவும், அதையொட்டிய தொடர் நடவடிக்கை மாநகராட்சியால் எடுக்கப்பட்டு வருகிறது என்றும் உதவி செயற் பொறியாளர் (ம) உதவி பொறியாளர் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

முதலில் தரைதளம் கட்டுவதற்கு மட்டும் அனுமதி வாங்கிவிட்டு, பிறகு கூடுதலாக கட்டடம் கட்டப்பட்டு திருமண மண்டபமாக கடந்த 2018 ஆண்டு முதல் மேற்கண்ட கட்டடம் செயல்பட்டு வந்துள்ளது. இதிலிருந்து கட்டடம் கட்டப்பட்ட ஆரம்பநிலையில், மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் அலுவலர்கள் கள ஆய்வு மேற்கொள்ளவில்லையென தெரிகிறது. மேலும், மனுதாரர் 29.12.2022 அன்று மனு அளித்தும் விதி மீறி கட்டப்பட்ட கட்டிடத்திற்கு மதுரை மாநகராட்சி சட்டம் 1971ன்படி எந்தவித அறிவிப்பு கட்டிட உரிமையாளருக்கு வழங்கப்படவில்லை. மாறாக காலம் கடந்து, கட்டிட பணியை நிறுத்துவதற்கு அறிவிப்பு அளித்தும், 13.3.2023 அன்று பூட்டி சீல்வைப்பதற்கும் அறிவிப்பு கொடுத்ததை இம்முறைமன்றம் கடுமையாக கண்டிக்கிறது. மேலும் மேற்கண்ட விதிமீறல் கட்டத்திற்கு சொத்துவரி விதிக்கப்பட்டதா என்பதற்கு மதுரை மாநகராட்சியிடமிருந்து எந்தவித தகவலும் இல்லை.

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் குறிப்பாக பிரிவு 7 (ii) (c)

7. The Ombudsman shall perform all or any of the following functions, namely –

(a) xx

(b) xx

(ii) (c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules. கீழ்

2018ஆம் ஆண்டு, வீட்டு மனையில் தரை தளம் கட்டுவதற்கு மட்டும் அனுமதிபெற்று, கூடுதலாக கட்டடம் கட்டப்பட்டு "புகழ் மகால்" என்ற பெயரில் திருமணம் மண்டபமாக செயல்பட அனுமதி அளித்த மதுரை மாநகராட்சியின் மண்டலம் 2ன் சம்மந்தப்பட்ட அலுவலர்களின் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. மதுரை மாநகராட்சியின் உதவி செயற்பொறியாளர் (ம) உதவி பொறியாளர் ஆகியோர் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கை குறித்த அறிக்கையினை இம்முறைமன்றத்திற்கு 45 தினங்களுக்குள் அனுப்பி வைக்கும்படி மதுரை மாநகராட்சி ஆணையருக்கு அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

The collusion and complicity on the part of the local field officials delinquents are exposed threadbare to the eyes of the Forum. If the field officials of the Madurai Corporation behave like this, it will be a deplorable commentary on the state of affairs prevailing in the Local Body. Lock and Seal notice was issued only on 13.3.2023 after receipt of the petition by this Forum. The Commissioner Madurai Corporation is directed to identify the delinquent officials involved in this scam apart from the

officials alleged by the petitioner and initiate tangible disciplinary action instead of issuing show cause notice as is being seen in some other cases which is an eyewash hood winking the Forum, system and the public.

If this kind of delinquency is not dealt with deterrently it would lead to more fatal consequences in the construction of building reeking with deviation, violations and rule breaking. The Director of Municipal Administration is instructed to supervise the compliance by the Madurai Corporation. A detailed circular may be circulated to all Corporations under The Director of Municipal Administrations jurisdiction to inculate pro-active, dynamic and sensitive approach towards construction of buildings in accordance with the plan approvals without violation and any deviation should be handled then and there by invoking the Town and Country Planning Act Rules and Regulations.

2023-ஆம் ஆண்டு மே திங்கள் 03-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. R. மயில்சாமி,
மனை எண்.5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி, மதுரை – 18.
2. ஆணையர்,
மண்டலம் - 2 (வடக்கு),
மதுரை மாநகராட்சி.
3. உதவி ஆணையர்,
மண்டலம் - 2 (வடக்கு),
மதுரை மாநகராட்சி.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.
5. இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.